செய்தி வெளியீடு எண். 91 நாள் 13.02.2017

**திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. ஒரு கோடியே 55 லட்சத்தி 97 ஆயிரத்தி 100 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 82 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 92 மனுக்களும், சமூக நலத்திட்டம் 26 மனுக்களும், குடும்ப அட்டை 66 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 02 மனுவும், வேலைவாய்ப்பு 36 மனுக்களும், கல்வி 01 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 08 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 21 மனுக்களும், கடனுதவி 10 மனுக்களும், அடிப்படை தேவை / போக்குவரத்து / சுகாதாரம் 07 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 07 மனுக்களும், இதரதுறை 25 மனுக்களும், பேரிடர் 13 மனுக்களும், உழவர் பாதுகாப்பு திட்டம் 04 மனுக்களும், சான்றிதழ் 21 மனுக்களும், சான்றிதழ் நகல் 02 மனுவும் என மொத்தம் 423 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வருவாய் துறையின் மூலம் கருணை அடிப்படையில் 5 நபர்பளுக்கு வேலைவாய்ப்புக்கான ஆணைகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குருப் II-A தேர்வில் தேர்ச்சி பெற்ற 16 நபர்களுக்கு பணி நியமன உத்தரவு, சமூக பாதுகாப்பு திட்டம் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு.சிவக்குமார் என்பவரது மனைவி திருமதி.மில்கா அவருக்கு ரூ.3,00,000 காசோலையும், புது வாழ்வு திட்டம் சார்பாக 33 சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடனாக ரூ. ஒரு கோடியே 42 லட்சத்தி 65 ஆயிரத்திற்கான காசோலைகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக 10 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ.ஒரு லட்சத்திற்கான உதவி தொகையும் (மொத்தம் ரூ.10,00,000), அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக மாவட்ட அளவில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரை, போட்டிகள் நடத்தப்பட்டு 15 மாணவ மாணவிகளுக்கு காசோலை (மொத்தம் ரூ.32,100) மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும், அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டத்தின் கீழ் 10 பள்ளிகளுக்கு (ELCOM English Project) TAB ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ட்டி.ஆர்.மல்லிகா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ராஜேந்திரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~